Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** } **Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.10**

Defence

Court

| | |
|---|---|
| Name | **வெங்கடேசன்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of December 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 18th day of December 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் புதுச்சேரி மாநிலம், பாகூரில் வசிக்கிறேன். இறந்து போன அரவிந்த் எனக்கு தெரியும். எங்கள் உறவினர். கடந்த 26.01.2025 அன்று இரவு 1.30 மணிக்கு எனக்கு போன் வந்தது. அரவிந்தை பாலாஜி என்பவர் வெட்டி விட்டதாக தகவல் வந்தது. உடனே கிளம்பி நான் கடலூரில் உள்ள அரவிந்த் வீட்டிற்கு வந்தேன். அங்கு இருந்த சுதர்சனன் என்ற தம்பியிடம் எங்கே சம்பவம் நடந்தது என்று காட்ட சொன்னேன். சின்னசாமி பிளாட் என சொன்னார். நானும் சுதர்சனனும் அங்கு சென்றோம். நான் அங்கு சென்ற போது போலிசார் லைட் வெளிச்சத்தில் படம் வரைந்துக்கொண்டு இருந்தார்கள். பார்வை மகஜர் தயார் செய்தார்கள். **அதில் முதல் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் அதசாஆ 2 ஆகும்.** இரத்தம் தோய்ந்த மண்ணை போலிசார் சேகரித்தனர். இரத்தம் தோயாத மண் சிறிதளவு சேகரித்தனர். அதனை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினர். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ 3 ஆகும்.** இரத்தம் தோய்ந்த மண் மற்றும் இரத்தம் தோயாத மண் **சான்று பொருள் 3 வரிசை.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**:

நான் பாகூரில் இருந்து மருத்துவமனைக்கு செல்லவில்லை. சுதர்சனன் சம்பவயிடத்தை எனக்கு அடையாளம் காட்டியதாக நான் போலிசாரிடம் சொல்லியுள்ளேன். அதசாஆ 2 பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும். சம்பவயிடத்தில் மூன்று செம்மண் சாலைகள் உள்ளது. வரைப்படத்தில் போலிசார் மூன்று செம்மண் சாலைகளை காண்பித்துள்ளார்கள்.

யாருடைய வீடு மேற்கு பக்கம் உள்ளதாக வரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மின் கம்பம் தெற்கு பக்கம் உள்ளதாக வரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. (சாட்சி பார்வை மகஜர் மற்றும் வரைப்படத்தை பார்க்காமல் மேற்படி விவரங்களை பதிலாக கூறினார்). உதவி ஆய்வாளர் பார்வை மகஜரை தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் தயாரிக்கப்பட்டதாக உள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் தயாரிக்கப்பட்ட இடமாக சின்னசாமி நகர் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. வெளிச்சத்தில் நான் கையொப்பம் செய்ததாக போலிசாரிடம் சொல்லியுள்ளேன். நான் இறந்த அரவிந்த் உறவினர் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். கைப்பற்றுதல் மகஜரில் சான்று பொருள் கைப்பற்றப்பட்ட நேரம் காலையா அல்லது மாலையா என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் என் முன்னிலையில் போலிசார் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும் இறந்த அரவிந்துக்கு உறவினர் என்ற காரணத்தினால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the*
*Witness. Admitted and acknowledged*
*by him/ her to be Correct.*
*Sd/-Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore*